# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஆகஸ்ட் 17, 2024 Weekly E-paper • August 17, 2024




## விளையாட்டுகள் தொடங்கிவிட்டன?

சுப. வீரபாண்டியன்

## இயக்கச் செய்திகள்

## ‘வஞ்சனை’ செய்த ஒன்றியம்!

தலையங்கம்

## ஹிண்டன்பர்க் இரண்டாவது அறிக்கையும்...

சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஆகஸ்ட் 17, 2024 Weekly E-paper ● August 17, 2024


# விளையாட்டுகள் தொடங்கிவிட்டன?

சுப. வீரபாண்டியன்

வரவிருக்கும் 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலையொட்டி 2025 பிற்பகுதியில் பல்வேறு விதமான தேர்தல் முன்முயற்சிகள், வியூகங்கள், சூழ்ச்சிகள் எல்லாம் தொடங்கும் என்பது பொதுவான எதிர்பார்ப்பு! ஆனால் இந்த முறை, இப்போதே அவை தொடங்கிவிட்டனவோ என்று எண்ணத் தோன்றுகிறது!

இனிமேல்தான் என் விளையாட்டு ஆரம்பம் என்று நடிகை குஷ்பூ சொல்லி இருப்பதை வைத்து இதனை நாம் எழுதவில்லை. அது வெறும் விளையாட்டுச் செய்திகளில் இடம்பெற வேண்டிய ஒன்று என்பதை நாம் அறிவோம்!

ஒரு வாரம் அல்லது பத்து நாள்களுக்கு முன்பு, ஏலகிரி மலையில் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர், மருத்துவர் ராமதாஸ் அவர்கள் திமுக கூட்டணியில் உள்ள கட்சித் தலைவர்கள் சிலரோடு ஒரு சந்திப்பை நிகழ்த்தி இருக்கிறார் என்று ஒரு செய்தி கசிகிறது! அதற்குப் பிறகுதான் கூட்டணியில் உள்ள தலைவர் ஒருவர், சற்று வேறுபட்டு அறிக்கை தந்திருக்கிறார் என்பதாகவும் கூறுகின்றனர்! கட்சி வேறுபாடுகளைக் கடந்து, வன்னியர்கள் யாவரும் ஓரணியில் திரண்டு, அண்டம் நடுநடுங்க, ஆகாசம் கிடுகிடுங்க போராட்டம் நடத்த வேண்டும் என்பது மருத்துவரின் திட்டமாம்!

அருந்ததியர்களுக்கான முன்னுரிமை இட ஒதுக்கீட்டை மறுப்பது என்பதும் ஒருவிதமான சலசலப்பை இன்று ஏற்படுத்தி உள்ளது. இது சட்டென்று முடிவுக்கு வந்துவிடுமா அல்லது வளர்ந்து பேருருவம் கொள்ளுமா என்பதும் கேள்விக்குறியாக இருக்கிறது!

சாதிச் சங்கங்களைத் தங்களோடு இணைத்துக் கொண்டு, ஒரு சாதி - மதக் கூட்டணியை உருவாக்குவது பாஜகவின் திட்டமாக இருக்கலாம்!

யாரோடும் கூட்டணி இல்லை, எங்கள் வழி தனி வழி , நாங்கள் மாற்றுக் கட்சியை உருவாக்கவில்லை, மாற்று அரசியலை உருவாக்கவே வந்திருக்கிறோம்



என்றெல்லாம் வாய்ப்பந்தல் போட்ட ஒரு கட்சி, இப்போது உண்மையை உணரத் தொடங்கி இருக்கிறது என்று கூறுகிறார்கள்! இனிமேல் நம் உறவுகள் நாகரிகமாகவும், கண்ணியமாகவும் பேச வேண்டும் என்ற ஞானோதயமும் அந்தக் கட்சிக்கு ஏற்பட்டுள்ளதாம். அது திருச்சியில் வாங்கிய அடியின் எதிர் விளைவு என்று அந்தக் கட்சிக்காரர்கள் சிலரே கூறுகின்றனர்!

தனித்தே போட்டி என்னும் வீராப்பை அந்தக் கட்சி வீசி எறிந்துவிட்டு, சித்தப்பாவோடு கூட்டணி அமைத்துக் கொள்ள முயற்சிகள் நடக்கின்றன என்றும் கூறுகின்றனர். பேச்சு வார்த்தைகள் ஏறத்தாழ முடிந்து விட்டன என்றும் செய்தி வருகிறது!

இவற்றுக்கிடையில், வரும் செப்டம்பர் இறுதியில் விக்கிரவாண்டியில் ஒரு நடிகர் வந்து குதிக்கப் போகிறார் என்பதாக ஏடுகள் எழுதுகின்றன.

இவை அனைத்தும் உண்மையாகவே இருந்தாலும், நாம் அச்சப்பட வேண்டியதில்லை. திமுகழகம் என்னும் ஆலமரமே, அடுத்த தேர்தலிலும் மேலும் தன் கிளைகளை விரிக்கும், விழுதுகளை இறக்கும்! 40க்கு 40 என்னும் இலக்கில் வெற்றி பெற்ற நாம், அடுத்த தேர்தலில் 200 என்னும் கணக்கிலும் வென்றே தீருவோம்!

மிதிபட்டு அழியும் எதிரிகள் காரியம்! உதித்தே தீரும் உதய சூரியன்!! ●

# தென்மண்டல அமைப்புக் கூட்டங்கள்



மதுரை மாவட்டம்



விருதுநகர் மாவட்டம்



இராமநாதபுரம் மாவட்டம்



சிவகங்கை மாவட்டம்

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தென்மண்டல அமைப்புக் கூட்டங்கள் 10-08-2024/ 11-08-2024 ஆகிய இரண்டு நாள்களில் மதுரை, விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் நடைபெற்றன. அனைத்து மாவட்டங்களிலும் பேரவைப் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், அமைப்புச் செயலாளர் ப. புலேந்திரன், தென்மண்டலத் துணைப் பொதுச் செயலாளர் இராம. வைரமுத்து ஆகியோர் கலந்து கொண்டனர்.

மதுரை மாவட்டத்தில் மாநில அறிவுரைஞர் குழு உறுப்பினர் புலவர் ஜெயபால் சண்முகம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.கருப்பையா, மாவட்டத் தலைவர் சந்திரன், மாவட்டச் செயலாளர் பி.அமர்நாத் ஆகியோரும்; விருதுநகர் மாவட்டத்தில் மாவட்டத் தலைவர் கணேசமூர்த்தி, மாவட்டப் பொருளாளர் பாஸ்கரன் உள்ளிட்டோரும்; இராமநாதபுரத்தில் மாவட்ட அமைப்பாளர் மேகவண்ணன் உள்ளிட்டோரும்; சிவகங்கை மாவட்டத்தில் மாவட்டத் தலைவர் பரமேஸ்வரன், செல்வம் முடியரசன், 'திராவிட முழக்கம் ' பொறுப்பாசிரியர் குமரன்தாஸ், மாவட்டச் செயலாளர் நவில்; திண்டுக்கல் மாவட்டத்தில் கிழக்கு மாவட்டத் தலைவர் தமிழினியன், மாநில கொள்கை பரப்புச் செயலாளர் கி. இரவிச்சந்திரன், தலைமைக் குழு உறுப்பினர் ஞானசேகர், கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆனந்தராஜ், மேற்கு மாவட்டத் தலைவர் தமிழ் முத்து ஆகியோரும் தென்மண்டல மாவட்ட அமைப்புக் கூட்டங்களைச் சிறப்பு செய்தனர்.

இக்கூட்டங்களில் ஒன்றிய அரசின் மூன்று புதிய குற்றவியல் சட்டங்களுக்கு எதிராகவும், தென்மண்டல குடும்ப ஒன்றுகூடல் நடத்துவது குறித்தும், தந்தை பெரியார் பிறந்த நாளில் செய்ய வேண்டிய பணிகள் குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

## கலைஞர் நினைவுநாள் - மதுரை



மதுரை மாவட்ட திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் இராம. வைரமுத்து தலைமையில் மாநில அறிவுரைஞர் குழு உறுப்பினர் புலவர் ஜெயபால் சண்முகம், தலைமை செயற்குழு உறுப்பினர் மா.கருப்பையா, மாவட்டத் தலைவர் மருத்துவர் சந்திரன் ஆகியோர் முன்னிலையில் 07.08.2024 அன்று காலை தலைவர் கலைஞர் நினைவு நாளில் அவரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் பேரவை தோழர்கள் தம்பி பிரபு, முருகன், பெரியார் மருது, ஸ்டூடியோ சரவணன், சொக்கலிங்கம், பகலவன், சுகுமாறன், அன்புமதி, ஆசைத்தம்பி, அழகர்சாமி, ஆனந்த் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## ‘வஞ்சனை’ செய்த ஒன்றியம்!

கடந்த இடைக்கால பட்ஜெட்டில் தெற்கு இரயில்வே புதிய வழித்தடங்களுக்கு ரூ. 976 கோடி ஒதுக்குவதாகச் சொல்லி, இப்போது வெறும் ரூ. 301 கோடியாகக் குறைத்து ஏமாற்றி இருக்கிறது மோடியின் ஒன்றிய அரசு.

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டின் பெண்களின் உரிமையைப் பேணி ஒவ்வொரு மாதமும் ரூபாய் 1000/= வழங்கி வருகிறார், தமிழ்நாடு அரசு சார்பாக. இது அவருக்குப் பெருமை சேர்க்கிறது. ஆனால் ஒன்றிய அரேசோ,

1. இடைக்கால பட்ஜெட்டில் கரூர் - திண்டுக்கல் வழித்தடத்திற்கு ரூ. 150 கோடி என்று சொல்லி இப்போது வெறும் 1000 ரூபாயை ஒதுக்கியிருக்கிறது.

2. சென்னை - மகாபலிபுரம் - கடலூர் பாதைக்கு ரூ. 25 கோடி என்று சொல்லி இப்போது 1000 ரூபாய் ஒதுக்கி இருக்கிறது.

3. ஈரோடு - பழனி இரட்டைப் பாதை ; காட்பாடி - விழுப்புரம் இரட்டைப்பாதை ; திண்டிவனம் - செஞ்சி - திருவண்ணாமலை ; ஸ்ரீபெரும்புதூர் - கூடுவாஞ்சேரி - இருங்காட்டுக்கோட்டைப் பாதை.....

இப்படித் தமிழ்நாட்டில் இரயில் பாதைகள் போடுவதற்குத் திட்டச் செலவாக வெறும் 1000 ரூபாய்களை ஒதுக்கி இருக்கும் ஒன்றிய அரசின் செயல் வெட்கக் கேடானது என்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன். இது மோடிக்கும், நிர்மலா சீத்தாராமனுக்கும் சிறுமையைத் தான் தருகிறது.

" நெஞ்சில் உரமின்றி, நேர்மைத் திறனின்றி, வஞ்சனை செய்வாரடி " என்கிறார் பாரதியார்.

தேர்தல் மூலம் மக்களைச் சந்திக்காமல் நிதியமைச்சராக ஆகியிருக்கும் நிர்மலா சீத்தாராமன் பட்ஜெட்டுக்கு முன்னர் கிண்டும் 'அல்வா' வுக்குக் கூட ஆயிரம் ரூபாய் போதாதே!

அல்வா இனிப்பாக இருக்கும். அளவுக்கு மீறிக் கொடுத்தால் ஆபத்தில் போய் முடியும்.

அப்போது 'பீகார்'ஆஸ்பத்திரி, 'ஆந்திரா' ஆஸ்பத்திரியால் கூட காப்பாற்ற முடியாமல் போய்விடும்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## காஞ்சிபுரம் கருத்தரங்கம்



'பெண்ணுரிமையும் ஆணவக்கொலைகளும்' என்ற தலைப்பில் 11-08-2024 அன்று காஞ்சிபுரம் ராஜ்பவன் அரங்கில் பேரவையின் காஞ்சி மாவட்டத்தின் சார்பாக கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கம் காஞ்சி மாவட்டச் செயலாளர் சாரதாதேவி தலைமையில் மகளிர் சட்ட உதவி மன்றத் தலைவர் முனைவர் உ.நிர்மலா ராணி, 'மக்கள் மன்றம்' ஜெஸ்லி ஆகியோர் கருத்துரையுடன் நிறைவு பெற்றது.

# ஹிண்டன்பர்க் இரண்டாவது அறிக்கையும் பா.ஜ.க அரசின் பதட்டமும்!

**சாரதாதேவி**

சென்ற 2023 ஆம் ஆண்டு பெரும் புயலைக் கிளப்பியது அமெரிக்காவைச் சேர்ந்த ஹிண்டன்பர்க் நிறுவனத்தின் அதானி குழுமத்தின் பங்குச் சந்தை ஊழல் குறித்த அறிக்கை. அதானியின் பங்குகள் பங்குச் சந்தையில் பெரும் அடி வாங்கின. உடனடியாக அந்த நிறுவனம் பல சொத்துகளை விற்று அந்த நட்டத்தை ஈடு செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டது. உச்ச நீதிமன்றத்தில் அந்த முறைகேடு குறித்து விசாரிக்க வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித உச்ச நீதிமன்றம், இந்திய பங்குகள் மற்றும் பரிவர்த்தனை ஆணையமான செபி (SEBI) யிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தது. அந்த 6 பேர் கொண்ட குழு விசாரணைக்குப் பின் தன் அறிக்கையை இந்த ஆண்டு மே மாதம் அளித்தது. அதில், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் முதலீட்டு பரிவர்த்தனைகளில் சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகள் இருப்பதாகவும், ஆனால், எப்படி விதிமீறல்கள் நடந்தன எனக் கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் அது அறிக்கை அளித்திருக்கிறது.

அதைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றமும், அதானி குழுமத்தின் மோசடிகள் குறித்த எந்த முகாந்திரமான தரவுகளும் இல்லை என்றும், அது தொடர்பான செபியின் விசாரணையில் தாங்கள் தலையிட முடியாதென்றும் ஒதுங்கிக் கொண்டது. மோடியின் நட்பு இது கூடச் செய்யாதா? பங்குச் சந்தையில் அதானி குழுமத்தின் பங்குகள் மீண்டும் ஏறத் தொடங்கின. அப்பாடா என அவர்கள் மூச்சு விடுவதற்குள், இதோ இரண்டாவது அறிக்கையைத் தூக்கிக் கொண்டு வந்து விட்டது ஹிண்டன்பர்க் நிறுவனம்.

யாரோ ஒரு விசில் ப்ளோயர் (whistle blower), செபியின் இன்றைய தலைவர் மாதபி புச் மற்றும் அவரது கணவர் தவல் புச் ஆகியோருக்கு அதானி குழுமத்தின் வெளிநாட்டு நிறுவனங்களில் கணிசமான பங்குகள் இருப்பதாக விசில் அடித்து (அதாவது பெயர் குறிப்பிடாமல், ஒரு அமைப்புக்கு உள்ளே நடக்கும் முறைகேடுகளை ஏதேனும் வகையில் தெரியப்படுத்திவிடுவது) விட்டதாகச் சொல்லி இருக்கிறது.

யாரிந்த மாதபி புச்? இந்தப் பெண்மணி நிதி அமைச்சகத்தின் பல்வேறு முக்கிய பொறுப்புகளை வகித்தவர். 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் செபி அமைப்பின் தலைவராக நியமிக்கப்பட்டவர். அவ்வாறு நியமிக்கப் படுவதற்கு முன், அவர் முன்பு ஹிண்டன்பர்க் குறிப்பிட்ட அதானியின் போலியான வெளிநாட்டு நிறுவனங்களில் பங்குகள் வைத்திருந்ததாகவும், அவற்றை அவசர அவசரமாக தன் கணவர் பெயருக்கு மாற்றியதாகவும் தெரிகிறது. ஐபிஇ ப்ளஸ் என்ற மொரீஷியஸ் நாட்டில் தங்களுக்குச் சொந்தமான ஒரு நிதி மேலாண்மை நிறுவனத்தின் மூலமாக மாற்றியதாகத் தெரிகிறது. மொரீஷியஸ் நாடு, முதலீட்டாளர்கள் விரும்பும் வரிச் சலுகைகள் கொடுக்கும் நாடு. இதே போன்று வரி புகலிட நாடான பெர்முடாவில் குளோபல் டைனமிக்ஸ் ஆப்பர்சுனிட்டி ஃபண்ட் என்ற அதானி குழுமத்திற்குச் சொந்தமான நிறுவனம் தான் பங்குச் சந்தையில் அதானியின் பங்குகள் செயற்கையாக விலை உயர உதவி செய்தன என்றும் ஹிண்டன்பர்க் அறிக்கை கூறுகிறது. அப்படியான அந்த நிறுவனம் ஐபிஇ ப்ளஸ்சில் முதலீடு செய்துள்ளதும் ஹிண்டன்பர்க்கின் இரண்டாவது அறிக்கையில் தெரிய வந்துள்ளது.

2023 இல் அதானி குழுமத்தின் மோசடிகளை விசாரிக்க அமைக்கப்பட்ட 6 பேர் கொண்ட குழுவில் மாதபி புச் இருந்தாரா என்றால், அதை விசாரித்த செபி நிறுவனத்தின் தலைவராகவும், அந்த விசாரணையில் தன் விளக்கமும் அளித்துள்ளார் எனவும் தெரிகிறது. அதானி குழுமத்தின் மீதான விசாரணை அத்தோடு கைவிடப்பட்டதில் அவருடைய ஆர்வமும் பங்கும் நிச்சயம் உண்டு என இப்போது சந்தேகப்பட வேண்டி இருக்கிறது.

2022 ஆம் ஆண்டுதான், இந்தியப் பங்குச் சந்தையின் நுட்ப ரகசியங்களை ஒரு இமயமலைச் சாமியாருக்குக் கசியவிட்டு, தேசிய பங்குச் சந்தைக்கு பல ஆயிரம் கோடி ரூபாய்கள் நட்டத்தை ஏற்படுத்தியதாக சித்ரா ராமகிருஷ்ணன் எனும் பெண் கைது செய்யப்பட்டார். இவர்கள் பா.ஜ.க. வின் ஆசியோடு தலைமைப் பதவிகளைக் கைப்பற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமர் மோடியின் அதானியுடனான நட்பை தொடக்கம் முதலே விமர்சித்தும் எச்சரித்தும் வரும் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்கள், ஹிண்டன்பர்க்கின் இந்த அறிக்கை குறித்து பேசுகையில், பங்குச் சந்தையில் ஏழை எளிய, நடுத்தர மக்களின் பணம் கணிசமான அளவில் முதலீடு செய்யப்பட்டுள்ளது, அதைப் பாதுகாக்கும் இடத்தில் இருக்கும் ஒரு தன்னாட்சி அமைப்பே, முறைகேடுகளில் ஈடுபட்டிருப்பதாக வரும் செய்தியை நாடாளு மன்றத்தின் கூட்டுக் குழுவின் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என கேட்டுள்ளார். உள்ளூர பதறிப் போயிருக்கும் மோடி அரசு, வழக்கம் போல இந்திய நாட்டுக்கு எதிராக காங்கிரஸ் கட்சி கூட்டுச் சதி செய்வதாகச் சொல்லி பசப்பப் பார்க்கிறது.

இதுபோன்ற போலி நிறுவனங்களைத் தொடங்கியும், அது குறித்துப் போலிச் செய்திகளைப் பரப்பியும், ரகசியங்களை பெரு நிறுவனங்களுக்குப் பகிர்ந்தும், இப்போது தான் சிறுசிறு பங்குகளில் தங்கள் பணத்தை முதலீடு செய்திருக்கும் சிறு முதலீட்டாளர்களின் பணத்தை எல்லாம் அபகரித்தால் என்ன செய்வது? ஒரு தன்னாட்சி நிறுவனம் கூட சுதந்திரமாகவும் மக்கள் நலனிலும் செயல்பட முடியாவிட்டால், மக்களின் கதி என்ன?

நாடு முழுதும் பரப்புரைகள் செய்யப்பட்டு போராட்டங்கள் வெடிக்கும் என எச்சரித்துள்ளன எதிர்க் கட்சிகள்! பொறுத்திருப்போம்!

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian